◆ ADVT ◆
இங்கே விளம்பரம்
98700 06472 · need24.digital

NEED 24 NEWS
हर ख़बर, हर शहर

நீட் 24 நியூஸ்

ஒவ்வொரு செய்தி, ஒவ்வொரு நகரம்

◆ ADVT ◆
இங்கே விளம்பரம்
98700 06472 · need24.digital

DIGITAL E-PAPER

PRGI APPLICATION UNDER PROCESS
Application No. T/GJ/2026/0619/2304/1577

GST
GSTIN 24CINPG0564Q1ZT

UDYAM REGISTERED
UDYAM-GJ-14-0003714

◆ DIGITAL NEWS NETWORK ◆
இந்தியாவின் நம்பகமான பன்மொழி டிஜிட்டல் செய்தி வலையமைப்பு
11+ Languages | 24×7 Live | e-Paper Daily

எங்கள் App பதிவிறக்கவும்
Download on the App Store
GET IT ON Google Play

www.need24.digital
info@need24.in
+91 98700 06472
FOLLOW US:

तेज़ | सटीक | निष्पक्ष | जनहित में | सच की आवाज़ | जन-जन की आवाज़ | निडर पत्रकारिता

TAMIL NADU | நீட் 24 நியூஸ் · ஒவ்வொரு செய்தி, ஒவ்வொரு நகரம் | 19 November 2026

திருவாரூர் ஆட்சியரக கூட்டரங்கில் தமிழக நூலக ஆணைக்குழு தலைவர் ஜோதிமணி தலைமையில் ஆய்வு கூட்டம்



திருவாரூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை செயலாக்க நூலகக்குழு ஆய்வுக்கூட்டம் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலக நூலக ஆணைக்குழு தலைவர் / காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.லெ.இ.ஜோதிமணி அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வி.சதீஸ்குமார், இ.கா.ப., அவர்கள், சட்டமன்ற பேரவை நூலகக்குழு உறுப்பினர்கள் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.வீ.கருப்பையா அவர்கள், சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் மரு.க.கபில் அவர்கள், திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.விஜயகுமார் (எ) நவல்பட்டு எஸ்.விஜி அவர்கள், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை சார்புச் செயலாளர் திருமதி.ர.கற்பகம் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.பா.கலைவாணி அவர்கள், ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திரு.ஸ்ரீதர் அவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்

திருவாரூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை செயலாக்க நூலகக்குழு ஆய்வுக்கூட்டம் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலக நூலக ஆணைக்குழு தலைவர் / காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் லெ.இ.ஜோதிமணி தலைமையில் மாவட்ட ஆட்சியர் வ.மோகனச்சந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்வி.சதீஸ்குமார், சட்டமன்ற பேரவை நூலகக்குழு உறுப்பினர்கள் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் மு.வீ.கருப்பையா , சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் மரு.க.கபில் , திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் விஜயகுமார் (எ) நவல்பட்டு எஸ்.விஜி தமிழ்நாடு சட்டமன்ற பேரவை சார்புச் செயலாளர் ர.கற்பகம் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் பா.கலைவாணி, ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் ஸ்ரீதர் ஆகியோர் உடனிருந்தனர்

— MAHENDRAN M

EDUCATION

வேலூரில் காகிதப்பட்டறை பகுதியில் புதிய அரசு பொது நூலகக் கட்டிடம் இறுதிக் கட்டுமானம் முடிவுக்கு நெருங்கியது



வேலூர் #காகிதப்பட்டறை பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் அரசு பொது நூலகக் கட்டடத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி லீலா அலெக்ஸ், இ.ஆ.ப. அவர்களுடன் நேரில் ஆய்வு மேற்கொண்டேன்.

தரைதளம் மற்றும் இரண்டு தளங்களுடன் அமைந்துள்ள இக்கட்டடத்தின் இறுதிக்கட்ட கட்டுமானப் பணிகள், வாசிப்பு அறைகள் மற்றும் வாசகர்களுக்கான அடிப்படை வசதிகளைப் பார்வையிட்டோம்.

வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் பணிகளைத் தரமாக விரைவில் முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வலியுறுத்தினோம்.

— S Dinesh

திட்டத்தின் கீழ் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம்;ஆட்சியர்



நாகப்பட்டினம் மாவட்டத்தில் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் கீழ் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பணியிடம் (தற்காலிக பணியிடம்) காலியாக உள்ளது. கிராம ஊராட்சிகளில் கழிப்பறை வசதி இல்லாத தகுதியான பயனாளிகளுக்கு தனி நபர் இல்லக்கழிப்பறைகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுதல், கிராம ஊராட்சிகளை திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மையில் தன்னிறைவு அடைய செய்திட கிராம ஊராட்சிகளுக்கு சுகாதார தன்னிறைவு திட்டம் தயாரித்தல் மற்றும் கிராம ஊராட்சி அளவிலான சுகாதார பணியாளர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்குதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்வதற்கு வெளிமுகமை மூலம் (outsourcing) பணியில் ஈடுபடத்திட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (SBM) பதவிக்கு, வெளிமுகமை மூலம் தற்காலிக நியமனத்திற்கு, ஊரக வளர்ச்சித் துறையில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

இளங்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். முதுகலை பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். 21 முதல் 40 வயது வரை இருக்கவேண்டும், மாத தொகுப்பூதியமாக ரூ.35,000/- வழங்கப்படும், எழுத்து தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு முறையில் தேர்வு நடைபெறும்

மேலும், கணினியில் முழுமையாகப் பணிபுரியும் திறன். Office Automation Course Certificate பெற்றிருக்க வேண்டும். Valid Driving license உடன் மோட்டார் சைக்கிள் / ஸ்கூட்டர் ஓட்ட தெரிந்திருக்க வேண்டும். வேறு ஏதேனும் நிறுவனங்களில் பணிபுரிந்து நடத்தை சரியில்லாமல் (Misappropriation) வெளியேற்றப்பட்டவர்களாக இருத்தல் கூடாது.மேலும், புகைப்படத்துடன் கூடிய தன் விவர குறிப்பு (Resume), அடையாள அட்டை நகல், கல்விச் சான்றிதழ்கள் ஆகியவற்றை ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட முகமை, நீதிமன்ற வளாகம், நாகப்பட்டினம் 611001. என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பங்களை 27.11.2026 என்ற தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

எழுத்து தேர்வு 09.12.2026 அன்று மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆய்வுக் கூட்ட அரங்கு, நாகப்பட்டினத்தில் நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் திரு.கே.ஜே.பிரவீன் குமார். இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

— MAHENDRAN M

எரவாஞ்சேரி காவல்நிலையத்தில் ஆய்வு செய்த கலெக்டர்



தமிழ்நாடு முதலமைச்சரின் "உங்களைத் தேடி உங்கள் ஊரில் ”திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டத்திற்குட்பட்ட எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் வ.மோகனச்சந்திரன் கள ஆய்வு மேற்கொண்டார். உடன் வட்டாட்சியர் தனசேகர் உள்ளார்.

— MAHENDRAN M

CRIME

வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே 200 போதை மாத்திரைகள் கொண்ட இளைஞர் கைது



வேலூர் மாவட்டம், குடியாத்தம் அருகே சட்டவிரோதமாக போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், நகர போலீசார் 200 போதை மாத்திரைகளுடன் 25 வயது முஸ்தக் (முகமது இலியாஸ் மகன்) என்பவரை கைது செய்தனர்.

குடியாத்தம் அடுத்த மேலாளத்தூர் கிராமம், ரயில்வே மேம்பாலம் அருகே குடியாத்தம் நகர காவல் ஆய்வாளர் சிவகுமார், உதவி ஆய்வாளர் ராஜி மற்றும் பல போலீசார் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்; அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த சந்தேகநபரை நிறுத்தினர்.

முஸ்தக் முன்னால் முரணாக பதிலளித்ததால், போலீசார் அவரது பையை சோதனை செய்து, அதில் சுமார் 200 போதை மாத்திரைகள் இருப்பது கண்டறியப்பட்டது.

போதை மாத்திரைகளை பறிமுதல் செய்து, முஸ்தக் மீது விசாரணை நடத்தி, பின்னர் நீதிமன்றத்தில் முன்வைத்து சிறையில் அடைத்தனர்.

— S Dinesh

தென்றல் நகரில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்படுவதை ஆட்சியர் பார்வையிட்டார்



திருவாரூர் நகராட்சி தென்றல் நகர் ஏழாவது வார்டில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட்டுள்ள வீடுகளை திருவாரூர் மாவட்ட ஆட்சியர் வ.மோகனச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.திருவாரூர் நகரமன்ற தலைவர் புவனப்பிரியா செந்தில், நகராட்சி ஆணையர் சுரேந்திர ஷா, நகர மன்ற உறுப்பினர் வரதராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.

— MAHENDRAN M

துளசியாம்பட்டினத்தில் ஔவையார் மணிமண்டபம் கட்டுவதை பார்வையிட்ட ஆட்சியர்



நாகை மாவட்டம் வேதாரண்யம் வட்டம் துளசியாம்பட்டிணம் கிராமத்தில் இந்துசமய அறநிலையத்துறை சார்பில் ஔவையார் மணிமண்டபம் கட்டப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சியர் கே.ஜே.பிரவீன் குமார் பார்வையிட்டு கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார். உடன் வேதாரண்யம் வருவாய் கோட்டாட்சியர் கண்ணன், இந்துசமய அறநிலையத்துறை இணை ஆணையர் முல்லை, வட்டாட்சியர் பசுபதி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

— MAHENDRAN M

LOCAL

தாகம் தீர்க்கும் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டது



ஒரு அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டு, தாகம் தீர்க்கும் நடவடிக்கைகள் குறித்து தகவல் வழங்கப்பட்டது.

அறிவிப்பில், தொடர்புடைய அதிகாரிகள் தாகம் தீர்க்கும் செயல்முறையை விரைவாகவும் பயனுள்ளதாகவும் மேற்கொள்வதாக உறுதி செய்துள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு தெளிவான வழிகாட்டுதலையும், பிரச்சினை தீர்விற்கான தெளிவான பாதையையும் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

— Kumar Periyasamy

HEALTH

விருதுநகர் மாவட்டத்தில் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டது



விருதுநகர் மாவட்ட காவல்துறை, போதைப் பொருள் பயன்பாட்டைத் தடுக்கும் நோக்கில், ஐந்து காவல் நிலையங்களைத் தேர்வு செய்து, அவற்றின் பரப்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. இதன் முதல் நிகழ்ச்சி, மு.ரெட்டியபட்டி காவல் நிலையத்தின் சார்பில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில், போதைப் பொருட்கள் உடல்நலத்திற்கு ஏற்படுத்தும் பாதிப்புகள், குடும்பத்தில் உருவாகும் பிரச்சினைகள், சமூகத்தில் உருவாகும் தீமைகள் ஆகியவற்றை பொதுமக்களுக்கு விளக்கி, அவற்றைத் தவிர்க்கும் முறைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இளைஞர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகாமல், கல்வி, விளையாட்டு போன்ற நல்ல செயல்களில் ஈடுபட வேண்டும் என்பதையும், போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் பயன்பாட்டைத் தடுக்கும் முயற்சிகளை வலியுறுத்தப்பட்டது.

போதைப் பொருள் தொடர்பான புகார்கள், 9600540221 என்ற சிறப்பு எண்ணுக்கு வழங்கலாம்; புகார் அளிப்பவர்களின் விவரங்கள் ரகசியமாக வைத்துக்கொள்ளப்படும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள், போதைப் பழக்கத்தை ஒழித்து, ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் தொடரப்படும்.

— Siva

புதுச்சேரி சின்னக்காலாப்பட்டு பகுதியில் தெருநாய்கள் அதிகரிப்பு, குடியிருப்பாளர்கள் பாதுகாப்புக்காக நடவடிக்கை கோரினர்



புதுச்சேரி சின்னக்காலாப்பட்டு சுனாமி குடியிருப்பு பகுதியில் தெருநாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது; பொதுமக்கள் பாதுகாப்பை கருத்தில் கொண்டு நகராட்சி ஆணையரிடம் நடவடிக்கை கோரியுள்ளனர்.

CCTV படங்கள் பள்ளி மாணவர்கள், சிறுவர்கள், இரவு நேரங்களில் மீனவர்கள் ஆகியோரைக் கண்டு, நாய்கள் துரத்தி, வாகனங்களை சேதப்படுத்தும் நிகழ்வுகளை வெளிப்படுத்துகின்றன.

இதனைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் மக்கள் மீண்டும் மனு அளித்து, நகராட்சி ஆணையரிடம் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர்.

நகராட்சி அதிகாரிகள் இதைத் துரிதமாக விசாரித்து, நாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த, பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும் திட்டங்களை முன்வைக்க வேண்டும்.

குடியிருப்பாளர்கள் இவ்வாறு தொடர்ந்தால், சமூக அமைதி மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு பாதிக்கப்படலாம்; அதனால் உடனடி தீர்வு அவசியம்.

— Sudhakaran, Puducherry

காரைக்குடி ஸ்ரீ ராஜராஜன் CBSE பள்ளி மாணவர்களின் சாதனை.



காரைக்குடி ஸ்ரீ ராஜராஜன் CBSE பள்ளியில் பல்வேறு பள்ளி மாணவர்கள் கலந்து கொண்ட மாணவர்களின் தனித் திறமையை வெளிக் கொண்டு வந்து அவர்கள் சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் மாணவர்களின் நினைவாற்றல், விளையாட்டு திறன், கல்வித் திறன் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் ப்ரீ கேஜி முதல் கிரேட் 12 வரை பயிலும் மாணவர்கள் இப்ப பயிற்சியில் பங்கேற்றனர்.இதில் சாதனை படைத்த மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி பாராட்டப்பட்டது.

— M. Arumugam


வேளாண்மை கல்லூரி மாணவர்களின் செயல் விளக்கம்.



காரைக்குடி அருகே உள்ள செட்டிநாடு வேளாண்மை கல்லூரி மாணவர்கள் சார்பில் ஊரக வேளாண்மை அனுபவ பயிற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் இதன் ஒரு பகுதியாக இப்பகுதியில் உள்ள தாஞ்சூர் கிராம விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை குறித்த செயல் விளக்கத்தை செய்து காட்டினார்

— M. Arumugam

ஆக்வான் புயல்



வங்க கடலில் உருவாகியுள்ள ஆக்குவான் புயல் தீவிரமான புயலாக மாறியது மேலும் இது ஆந்திர கடற்கரையில் புதுச்சேரி மாநிலம் ஏனாம் மற்றும் ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் இடையே கடற்கரை ஒட்டி கடக்கும் என்று இந்திய வானிலை மையம் தகவல்

— Sudhakaran, Puducherry

HEALTH

புதுச்சேரி அரசு மருத்துவமனைகளில் செவிலியர்கள் கருப்புப் பேட்ச் அணிந்து பணியிடங்கள் நிரப்ப வேண்டிய கோரிக்கை



புதுச்சேரி அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் செவிலியர்கள், காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்த, கருப்புப் பேட்ச் அணிந்து பணியாற்றத் தொடங்கியுள்ளனர்.

இந்த நடவடிக்கை அரசு பொது மருத்துவமனை, மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை போன்ற முக்கிய அரசு மருத்துவமனைகளில் காணப்படுகிறது; இங்கு பணியாற்றும் செவிலியர்கள், பணியிடங்கள் நிரம்பாத நிலைமையைத் தீர்க்க வேண்டுமெனக் கோருகின்றனர்.

செவிலியர்கள், தங்கள் பணியிடங்கள் நிரப்பப்படாததனால் ஏற்படும் சுமையைத் தாங்கி, நோயாளிகளுக்கு தரமான சுகாதார சேவையை வழங்கும் கடமையை நிறைவேற்றும் முயற்சியில், இந்த அமைதியான போராட்டத்தைத்

சங்கராபுரம் பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்க கோரிக்கை.



காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட சங்கராபுரம் பகுதியில் தேவையான அளவு கழிவுநீர் கால்வாய் இல்லாததால் பல இடங்களில் தெருக்களில் தான் தேங்கி கிடக்கிறது. சாலை, காலியிடங்கள், வீடுகளின் உள்பகுதி உள்பட பல்வேறு பகுதிகளில் கழிவு நீர் தேங்கி சுகாதார கேட்டை விளைவிக்கிறது. எனவே காரைக்குடி மாநகராட்சி துரித நடவடிக்கை எடுத்து சங்கராபுரம் பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்தை விரிவபடுத்த வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

— M. Arumugam

வள்ளியை துரத்திய யானை:தத்ரூவமாக அரங்கேறிய வள்ளி-முருகபெருமான் திருக்கல்யாணம்



முருகப்பெருமானின் ஆதிபடை வீடாகப் போற்றப்படும் நாகை மாவட்டம், திருக்குவளை அருகே உள்ள புகழ்பெற்ற எட்டுக்குடி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் கந்த சஷ்டி பெருவிழா கடந்த நவம்பர் 9ஆம் தேதி துவங்கி வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது.விழாவின் முக்கிய நிகழ்வான வள்ளி முருகப்பெருமான் திருக்கல்யாண வைபவம் இரவு பக்தி பரவசத்துடன் நடைபெற்றது.இதில் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும் வகையில், வள்ளியை யானை துரத்துவது போன்ற தத்ரூபமான காட்சி அரங்கேற்றப்பட்டது.

வள்ளியைத் திருமணம் செய்ய விரும்பிய முருகப்பெருமான், வேடன் திருக்கோலத்தில் வந்து வள்ளியிடம் காதலை வெளிப்படுத்தியதாகவும், அப்போது விநாயகப் பெருமான் யானை வடிவில் தோன்றி வள்ளியை அச்சுறுத்தியதாகவும் புராண வரலாறு கூறுகிறது.யானைய கண்டு அச்சமடைந்த வள்ளி, வேடன் வடிவில் இருந்த முருகப்பெருமானை அடைக்கலமாகப் பற்றிக் கொள்ளும் நிகழ்வை நினைவுபடுத்தும் வகையில் யானை வள்ளியைத் துரத்துவதும், அதிலிருந்து தப்பிக்க வள்ளி ஓடுவதும் என புராண நிகழ்வை நேரில் காண்பது போன்ற தத்ரூபமான காட்சி பக்தர்களை வெகுவாகக் கவர்ந்தது.இதனைத் தொடர்ந்து நடைபெற்ற திருக்கல்யாண வைபவத்திற்காக, வள்ளி, சமேதராக முருகப்பெருமான் மணக்கோலத்தில் எழுந்தருளிய மாலை மாற்றும் வைபவம் நடைபெற்றது. மந்திரங்கள் முழங்கவும், மங்கள வாத்தியங்கள் இசைக்கவும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.திருக்கல்யாணத்தின் முக்கிய நிகழ்வான மாங்கல்ய தாரணம் எனப்படும் மங்களகரமான தருணத்தில், வள்ளி நாயகிக்கு முருகப்பெருமான் திருமாங்கல்யம் அணிவித்து திருக்கல்யாண வைபவம் சிறப்பாக நடைபெற்றது.

— MAHENDRAN M

முத்துமாரியம்மன் அவதரித்த நாள்.



காரைக்குடியில் உள்ள லலிதா முத்துமாரியம்மன் கோவில் அம்பாள் அவதரித்த தினவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவையொட்டி ஏராளமான பக்தர்கள் காரைக்குடி முத்தாலம்மன் கோவிலிலிருந்து பால்குடம் எடுத்து கொப்புடையம்மன், கல்லுக்கட்டி வழியாக முத்துமாரியம்மன் கோயிலை அடைந்து அம்பாளுக்கு பாலாபிஷேகம், தீபாரதனை செய்து வழிபட்டனர்.

— M. Arumugam

வேலூர் மாவட்ட ஆட்சியர் பல்வேறு இடங்களில் நேரில் ஆய்வு!



வேலூர் மாவட்டம் மாநகராட்சி பகுதி அண்ணாசாலை பகுதியில் செயல்பட்டு வரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் பி எஸ் லீலா அலெக்ஸ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தின் செயல்பாடுகள், பணியாளர்களின் விவரங்கள் மற்றும் திட்டச் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள், அவர்களைப் பராமரிக்கும் முறைகள் குறித்தும் அலுவலர்களிடம் விரிவாகக் கேட்டறிந்தார். உடன் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் விஜயா உள்பட பலர் இருந்தனர்.

இதேபோல, வேலூர் ஊராட்சி ஒன்றியம், அத்தியூர் ஊராட்சி, குருமலை கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின்கீழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தை ஆய்வு செய்ததுடன், உணவின் தரம் மற்றும் அதன் சுவை குறித்தும் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பிரேமலதா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.விஜய் சந்திரன், மகளிர் திட்ட இயக்குநர் ஜெயசுதா, அணைக்கட்டு வட்டாட்சியர் மகேஸ்வரி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

— A RAM PRABHU

கம்யூனிஸ்ட் கட்சியின் கையெழுத்து இயக்கம்: விருதுநகர் எம். ரெட்டியபட்டி பள்ளியின் அவல நிலை திருத்தம் கோரிக்கை



நவம்பர் 17, 2023 அன்று திருச்சுழி அருகே உள்ள எம். ரெட்டியபட்டி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. பள்ளியின் அவல நிலையை கண்டித்து, 16 கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடைபெற்றது.

பள்ளியில் பல ஆண்டுகளாக பணிபுரியும் ஆசிரியர்களை பணியிட மாற்றம் செய்ய வேண்டும், ஆங்கில வழிக் கல்விக்கான நிரந்தர ஆசிரியர்களை நியமிக்க வேண்டும், கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி 30 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதத்தில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும், மாணவர்களின் பாதுகாப்புக்காக சிசிடிவி கண்காணிப்பு கேமராக்களை முறையாகச் செயல்படுத்த வேண்டும், காலியாக உள்ள வாட்ச்மேன், துப்புரவுப் பணியாளர், ஆய்வக உதவியாளர் மற்றும் எழுத்தர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். பள்ளி நூலக வாயிலில் முகப்பு விளக்கு அமைக்க வேண்டும், காலை உணவு மற்றும் சத்துணவுத் திட்டங்களை முழுமையாகக் கண்காணிக்க வேண்டும், ஆபத்தான நிலையில் உள்ள மூன்று கட்டிடங்களை அகற்ற வேண்டும்.

ஆங்கில வழிக் கல்வியை 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை விரிவுபடுத்த வேண்டும், கூடுதல் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்த வேண்டும், மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் இருக்கைகள் மற்றும் எழுதும் மேசைகள் வழங்க வேண்டும். டிஜிட்டல் நூலகம் மற்றும் அறிவியல் சார்ந்த கல்வி மையம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட 16 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சுழி ஒன்றியம் சார்பில் தலைமைத் தோழர் சி செல்வம், செயலாளர் முன்னிலை தோழர் ராமச்சந்திரன், ரெட்டியபட்டி கிளைச் செயலாளர் தோழர் மணிமாறன், வீதோச ஒன்றிய செயலாளர் தோழர் பிரேம்குமார், டைலர் பரட்ட நத்தம் கிளைச் செயலாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மாவட்ட செயலாளர் செந்தில்குமார் வழக்கறிஞர் முன்னிலையில் இயக்கம் தொடங்கப்பட்டது.

— Siva

மின் நிறுத்தம் அறிவிப்பு

வேலூர் மாவட்டம் காட்பாடி துணை மின் நிலையத்தில் அத்தியாவசிய பாராமரிப்பு பணிகள் நடைபெற உள்ள காரணமாக நாளை மறுநாள் 19 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை காட்பாடி, காந்திநகர், செங்குட்டை, கல்புதூர், காங்கேயநல்லூர், கழிஞ்சூர், வஞ்சூர், சேனூர், வண்டறந்தாங்கல், விருதம்பட்டு, கிறிஸ்டியான்பேட்டை, பள்ளிகுப்பம், வடுகன்குட்டை, எல்ஜி புதூர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் மின் வினியோகம் இருக்காது என மின் வாரிய செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

— A RAM PRABHU

விருதுநகர்: 19 வயது கல்லூரி மாணவர் வீரசோழன் பெரிய பள்ளிவாசல் அருகே கத்தி-அரிவாள் தாக்குதலில் காயமடைந்து, 22 வயது நாகராஜ் கைது



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி, நரிக்குடி அருகே உள்ள வீரசோழன் பெரிய பள்ளிவாசல் அருகே, 19 வயது முத்துவேல் (முத்துவேல்) தனது நண்பர்களுடன் சென்ற போது, 6 மோட்டார் சைக்கிள்களில் 10-க்கும் மேற்பட்டோர் கொண்ட கும்பல் அவரை வழி மறைத்து, கத்தி மற்றும் அரிவாள் கொண்டு சுற்றி வளைத்து வெட்டிய தாக்குதலுக்கு உள்ளாகினார்.


முத்துவேல் அருப்புக்கோட்டை சௌடாம்பிகா தனியார் கல்லூரியில் டிப்ளமோ சிவில் என்ஜினீயரிங் படித்து வருகிறார். தாக்குதலில் அவரது தலை மற்றும் கைகளில் அரிவாள் வெட்டு விழுந்து, கடுமையான படுகாயம் ஏற்பட்டது. உடனடியாக மதுரை தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

முத்துவேலின் தந்தை முருகன் (46) தாக்குதலுக்கான புகார் அளித்து, போலீசார் அஜித்குமார், தவமுருகன் உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்டவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்துகின்றனர். அதே நேரத்தில், ராமநாதபுரம் மாவட்டம் கமுதி தாலுகா, K.நெடுங்குளம் பகுதியில் இருந்து 22 வயது நாகராஜ் (காளிமுத்து மகன்) கைது செய்யப்பட்டு, சம்பவத்தில் ஈடுபட்ட மற்றவர்களைத் தேடி வருகின்றனர்.

சந்தேக நபர்களைத் தேடி, சம்பவத்தின் முழுமையான விசாரணை முடித்து, சட்டப்படி நடவடிக்கை எடுக்க திட்டமிட்டுள்ளனர்.

— Siva

நாகை துறைமுகத்தில் 1ஆம் எண் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்



வங்கக்கடலில் உருவானது காற்றழுத்த தாழ்வு மண்டலம்: 17-ம் தேதி தீவிர புயலாக வலுவடைய வாய்ப்பு; நாகப்பட்டினம் துறைமுகத்தில் 1-ம் எண் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்

தென்கிழக்கு வங்கக்கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்து சென்னைக்கு கிழக்கு-தென்கிழக்கே சுமார் 860 கி.மீ தொலைவில் நிலைகொண்டுள்ளதாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்ந்து வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை புயலாகவும், நாளை மறுநாள் நவம்பர் 17 மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் தீவிர புயலாகவும் வலுவடையக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, நாகப்பட்டினம், சென்னை, கடலூர், எண்ணூர், காட்டுப்பள்ளி, புதுச்சேரி, காரைக்கால், பாம்பன் மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களில் 1-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

— MAHENDRAN M

விழாவையொட்டி ஸ்ரீ சுப்பிரமணிய கோயிலில். வேல் வாங்கும் நிகழ்ச்சி



கடலூர் மாவட்டம் புருகீஸ்பேட்டை கந்த சஷ்டி விழாவையொட்டி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் வேல் வாங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. விழாவில் அரிஸ்டோ பள்ளியின் நிறுவனர் சிவகுமார் ஏற்பாட்டின் பேரில் ஆக்கூர் செல்வி செ.அமிர்தா பாட்டு, புதுவை ச. சீனிவாசன் வயலின், கடலூர் மு. பரமேஸ்வரன் மிருதங்கம் கடலூர் அ. முனுசாமி முகர்சிங் பக்தி, திருமுறை கச்சேரி மிக சிறப்பாக நடைபெற்றது.சிவக்குமார், பழனி ஏ.ஓ.குருநாதன் வழங்கினார்.

— MAHENDRAN M

POLITICS

புதுச்சேரி தற்காலிக சட்டப்பேரவைத் தலைவர் அன்பழகன் தேசிய பத்திரிகையாளர் தினம் கொண்டாடினார்



தேசிய பத்திரிகையாளர் தினத்தைப் பொருத்து, புதுச்சேரி தற்காலிக சட்டப்பேரவைத் தலைவர் அன்பழகன் செய்தியாளர்களை நேரில் சந்தித்து வாழ்த்துகள் மற்றும் பாராட்டுகளை தெரிவித்தார்.

அவர் செய்தியாளர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்களுடன் கேமரா மூலம் ஒளிப்பதிவு செய்து, செல்போனில் செல்பி வீடியோவும் எடுத்து மகிழ்ந்தார்.

பத்திரிகையாளர்களுடன் பல புகைப்படங்கள் (செல்பிகள்) எடுத்து, அனைவரையும் ஊக்குவித்து, ஊடக சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை ித்தார்.

— Sudhakaran, Puducherry

நாகை ஆட்சியரகத்தில் நடைப்பெற்ற மக்கள் தீர்க்கும் முகாமில் கோரிக்கை மனுகளை ஆட்சியர் பெற்றுக்கொண்டார்



நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் கே.ஜே.பிரவீன் குமார் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க தொடர்புடைய அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் பவணந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கோ.அரங்கநாதன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ர.ராமலிங்கம் ஆகியோர் உள்ளனர்.

— MAHENDRAN M